சுருக்கம்

பணியமைப்பு – திருப்பூர் மாநகராட்சி – தற்போதுள்ள பணியிடங்களை தொடருதல், மாற்றியமைத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் ஆணை வெளியிடப்படுகிறது

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மாநஅ) துறை

அரசாணை (நிலை) எண். 207 நாள் 22.10.2008

படிக்கப்பட்டது

1. அவசரச் சட்டம் எண்.6/2007 நாள் 17.11.2007
2. திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.12700/2007/சி1 6.2.2008 மற்றும் 6.8.2008
3. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.67236/2007/மா.ந.அ1 நாள் 14.12.2007 மற்றும் 20.8.2008

--------

ஆணை

திருப்பூர் நகராட்சி 1.1.2008 முதல் மாநகராட்சியாக நிலை உயர்த்தி முதலாவதாக படிக்கப்பட்ட அவசர சட்டத்தில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. 26.9.1996 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண்.237ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு மாநகராட்சி பணி விதிகள்1996–ன்படி, நிலை உயர்த்தப்பட்ட திருப்பூர் மாநகராட்சியில் சில புதிய பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யவும், பெயர் மாற்றம் செய்யவும் மேலும் சில பணியிடங்களை ஒருங்கிணைக்கவும் திருப்பூர் மாநகராட்சி ஆணையர், அம்மாநகராட்சி மன்றத்தின் ஒப்புதல் பெற்று, நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு அனுப்பியுள்ளார். நகராட்சி நிர்வாக ஆணையர் இதன்மீது தக்க ஆணை வழங்கும்படி தனது பரிந்துரையுடன் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2.நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பை அரசு கவனமுடன் ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது

1) வகுப்பு–1 அலுவலர்கள் மாநகராட்சி சட்டப்படி அரசால் நியமிக்கப்பட வேண்டும். எனவே, இதுகுறித்த செயற்குறிப்புகள் நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு அனுப்புமாறு ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

...2.

2) வகுப்பு II ,III மற்றும் IV-ம் நிலை அலுவலர்களை, ஆணையர் மாமன்றம் மூலம் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு நியமனம் செய்ய ஆணையிடுகிறது.

(i) வகுப்பு II அலுவலர்களை அரசின் உறுதியாக்கம் பெற்று மாமன்றத்தின் மூலம் நியமனம் செய்யப்பட வேண்டும்.

(ii) வகுப்பு III மற்றும் IV நிலை அலுவலர்களை அரசு வெளியிடும் ஆணைகளுக்குட்பட்டு நியமனக்குழுவால் நியமனம் செய்யப்பட வேண்டும். ஆனால் பதவி உயர்வு அளிப்பதால் ஏற்படும் காலி இடங்களில் அரசு ஆணை வெளியிடும் வரை நேரடி நியமனம் செய்யக்கூடாது. அவ்விடங்களில் தற்போதுள்ள மாநகராட்சி பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கலாம்.

(iii) பதவி உயர்வு வழங்கப்படுவதால் ஏற்படும் காலியிடங்களுக்கு மற்ற பிரிவுகளிலிருந்து அலுவலர்கள் தேவையெனில் மாற்றி நியமித்துக் கொள்ளலாம்.

(iv) கடந்த ஆறுமாத காலமாக காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பத் தேவையில்லை. கட்டாயம் தேவையென ஆணையர் கருதினால் அரசின் ஒப்புதல் பெற்று பூர்த்தி செய்ய அனுமதிக்கலாம்.

(v) புதிய மாநகராட்சி பணி விதிகளில் சேர்க்கப்படாத பணியிடங்கள் தற்காலிகமாக, சிறப்பு பணியிடங்களாக அனுமதித்து. இப்பணியிடங்கள் தற்போதுள்ள பணியாளர்கள் வேறு பணியிடங்களுக்கு செல்லும்பொழுதோ அல்லது பணி ஓய்வு பெறும்பொழுதோ நீக்கிவிடலாமென அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. மேலும், இவ்வாறான பணியிடங்கள் மாநகராட்சி நிர்வாகத்திற்கு அவசியம் என கருதப்பட்டால் இதுகுறித்து ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. 26.9.1996. நாளிட்ட அரசாணை(நிலை) எண்.237–ல் எடுக்கப்பட்ட கொள்கை முடிவின்படி நகரமைப்பு பணியிடங்கள் பொறியியல் பணியமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. எனவே, இம்மாநகராட்சியிலும் நகரமைப்பு பணியிடங்கள் பொறியியல் பணியமைப்பில் இணைக்கப்படுகிறது.

4. இணைப்பில் கண்டுள்ளவாறு திருப்பூர் மாநகராட்சியில் தற்போது தொடரச் செய்யவேண்டிய பணியிடங்கள், மாற்றியமைத்து ஒருங்கிணைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் மேலும் புதியதாக சில பணியிடங்கள் தோற்றுவித்து ஆணையிடப்படுகிறது.

...3..

5. இப்பணியிடங்களை தமிழ்நாடு மாநகராட்சிப் பணிவிதிகள், 1996ல் உள்ள வழிமுறைகளைப் பின்பற்றி நிரப்பப்பட வேண்டும். இவ்வாணையில் தோற்றுவிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் பதவி உயர்வின் மூலம் பூர்த்தி செய்யும்போது பணிவிதிகளில் குறிப்பிட்டுள்ள காலவரையரை பொருந்தாது.(Experience period prescribed for promotion need not be considered).

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்புஎண்.53966/நிதி/ ந.நி.கு.வ.துறை/நாள் 11.9.2008ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
1.நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை.5.
2.ஆணையர், திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர்.
3.இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை.108.
இ.கோ./உ.ந.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

## இணைப்பு

திருப்பூர் மாநகராட்சியில் தற்போதுள்ள பணியிடங்களை தொடரச் செய்தல், சில பணியிடங்களை ஒருங்கிணைத்தல், புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் பட்டியல்

| வ. எண். | பணியிடத்தின் பெயர் மற்றும் ஊதியம் ஏற்றமுறை | தற்போதுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை | புதியதாக தோற்றுவித்த பணியிடங்களின் எண்ணிக்கை | மொத்தப் பணியிடங்கள் மற்றும் அவற்றை நிரப்புதல் குறித்த வழிமுறைகள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| அ.பொதுப்பணி | | | | |
| 1. | உதவி ஆணையர் 9100–275–14050 | – | 3 | மூன்று பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுகிறது. தற்போது மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் 6500–200–10500 ஊதிய ஏற்ற முறையில் ஊதியம் பெறும் அலுவலர்களை பதவி உயர்வின் மூலம் நிரப்பப்பட வேண்டும் |
| 2. | மாமன்ற செயலாளர் 6500–200–10500 | – | 1 | ஒரு பணியிடம் தோற்றுவிக்கப்படுகிறது. இப்பணியிடமானது மாநகராட்சியின் சட்ட அலுவலர் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் பணிகளையும் உள்ளடக்கியதாக இருக்கும் |
| 3 | நிர்வாக அலுவலர் 6500–200–10500 | – | 1 | மாநகராட்சியில் தற்போதுள்ள மேலாளர் பணியிடத்தை நிர்வாக அலுவலர் பணியிடமாக பெயர் மாற்றம் செய்யப்படுகிறது. மாநகராட்சியில் கணக்கர்/வருவாய் அலுவலராக பணிபுரியும் அலுவலர்களை பதவி உயர்வின் மூலம் நிரப்பப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | கணக்கு அலுவலர்<br>6500–200–10500 | 2 | – | வருவாய் அலுவலர் மற்றும் கணக்கர் பணியிடங்களை ஒருங்கிணைத்து கணக்கு அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்படுகிறது. மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் |
| 5. | கண்காணிப்பாளர்<br>5300–150–8300 | – | 3 | மூன்று பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுகிறது. மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 6. | மாமன்ற நிருபர்<br>5300–150–8300 | – | 1 | ஒரு பணியிடம் தோற்றுவிக்கப்படுகிறது. மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். மாமன்ற நடவடிக்கைகள் குறிப்பெடுத்தல் மற்றும் மாமன்ற செயலாளருக்கு மன்ற நடவடிக்கைகள் தொடர்பாக உதவியாக இருக்க வேண்டும். |
| 7. | நேர்முக உதவியாளர்<br>4000–100–6000 | – | 2 | மேயர் மற்றும் ஆணையருக்கு இப்பணிடங்கள் தோற்றுவிக்கப்படுகிறது. மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 8. | சுருக்கெழுத்து தட்டச்சர்<br>4000–100–6000 | 1 | 2 | தற்போதுள்ள ஒரு பணியிடம் தொடரவும் மேலும் கூடுதலாக இரண்டு பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுகிறது. மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | உதவியாளர் மற்றும் கணக்கர்<br>4000–100–6000 | 13 | – | தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. உதவியாளர், வருவாய் ஆய்வாளர், சந்தைக் கண்காணிப்பாளர் ஆகிய பணியிடங்கள் ஒருங்கிணைக்கப்படுகிறது. |
| 10. | உதவி திட்ட அமைப்பாளர்<br>5500–175–9000 | 1 | – | தற்போதுள்ள பணியிடம் தொடர அனுமதிக்கப்படுகிறது. இப்பணி குறித்த பணிவிதிகள் தனியாக வெளியிடப்படும். |
| 11. | புள்ளி விபர கணினி தொகுப்பாளர்<br>3200–85–4900 | 1 | – | தற்போதுள்ள பணியிடம் தொடர அனுமதிக்கப்படுகிறது. இப்பணி குறித்த பணிவிதிகள் தனியாக வெளியிடப்படும். |
| 12. | வருவாய் உதவியாளர்<br>3200–85–4900<br>2650–65–3300–70–4000 | 22 | – | தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 13. | இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்<br>3200–85–4900 | 29 | – | தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. கருணை அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்ட பதிவறை எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர்களை இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சராக பதவி உயர்வு வழங்கலாம். மேலும் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கால அவகாசத்திற்குள் பணி விதிகளின்படி தட்டச்சு தேர்ச்சி பெறவேண்டும். |
| 14. | பொதுசுகாதார மேற்பார்வையாளர்<br>2650–65–3300–70–4000 | 17 | – | தற்போது பணியில் உள்ளவர்கள் பணி ஓய்வு பெறும்வரை மட்டும் தொடர அனுமதிக்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 15. | ஓட்டுநர்<br>3200-85-4900 | 31 | - | தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. ஓட்டுநர் பணியிடங்கள் பொதுவாக்கப்பட்டு அனைத்து பிரிவுகளுக்கும் பணி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். ஓட்டுநர் பணியிடம் கூடுதலாக தேவைப்படின் மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று ஒப்பந்த அடிப்படையில்(out source) பூர்த்தி செய்ய அனுமதிக்கப்படுகிறது. |
| 16. | பதிவறை எழுத்தர்<br>2610-60-3150-65-3540 | 2 | - | தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| ஆ.பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகம் | | | | |
| 1. | மாநகர பொறியாளர்<br>12000-375-16500 | - | 1 | இப்பணியிடம் புதியதாக தோற்றுவிக்கப்படுகிறது. மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 2. | செயற்பொறியாளர்<br>10000-325-15200 | 2 | - | தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | உதவி செயற்பொறியாளர் 8000–275–13500 | 1 | 3 | தற்போதுள்ள ஒரு பணியிடம் தொடர அனுமதிக்கப்படுகிறது. மேலும் கூடுதலாக மூன்று பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுகிறது. உதவிப் பொறியாளர்/ இளநிலை பொறியாளர்/ நகரமைப்பு ஆய்வர்/குடிநீர் பணிகள் கண்காணிப்பாளர்/மின் கண்காணிப்பாளர் பணியிடங்களிலிருந்து பதவி உயர்வு மூலம் நடைபெற வேண்டும். பதவி உயர்வுக்கு தகுதி வாய்ந்த அலுவலர்கள் இல்லையெனில் அயற்பணி அடிப்படையில் மாநகராட்சி பணிவிதிகளுக்குட்பட்டு அரசின் அனுமதி பெற்று மாநகராட்சி/நகராட்சிகளிலிருந்து நியமனம் செய்யலாம். |
| 4. | உதவிப்பொறியாளர்/ இளம்பொறியாளர் 6500–200–10500 5500–175–9000 | 13 | 5 | தற்போதுள்ள 13 பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மேலும் கூடுதலாக 5 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுகிறது. நகரமைப்பு ஆய்வர்/குடிநீர் பணி கண்காணிப்பாளர் /மின் கண்காணிப்பாளர் ஆகிய பணியிடங்கள் இப்பணியிடங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு தோற்றுவிக்கப்படுகிறது. மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 5. | தொழில்நுட்ப உதவியாளர் 4500–125–7000 | 3 | 15 | தற்போதுள்ள 3 பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மேலும் கூடுதலாக 15 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுகிறது. (பணி மேற்பார்வையாளர் [illegible] பணியிடங்களை ஒருங்கிணைக்கப்பட்டு தோற்றுவிக்கப்படுகிறது.) மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 6. | செயல்திறன் உதவியாளர் நிலை.1 4000–100–6000 | 9 | 10 | தற்போதுள்ள 9 பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மேலும் கூடுதலாக 10 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுகிறது. (கழிவுநீர் நீரேற்று நிலைய மின்பணியாளர் நிலை.1, பொருத்துநர் நிலை.1, குழாய் பொருத்துநர் ஆகிய பணியிடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு தோற்றுவிக்கப்படுகிறது.) மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 7 | செயல்திறன் உதவியாளர் நிலை.2 3050–75–3950–80–4590 | 26 | 20 | தற்போதுள்ள 26 பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மேலும் 20 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுகிறது. (மின்பணியாளர் நிலை.2, பொருத்துநர் நிலை.2, மீட்டர் ரீடர், குழாய் ஆய்வர், வடிதள படுகை இயக்குபவர், மின்கம்பியாளர், பணி ஆய்வர் ஆகிய பணியிடங்களை ஒருங்கிணைக்கப்பட்டு தோற்றுவிக்கப்படுகிறது) மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் |
| இ.பொதுசுகாதாரப் பணி | | | | |
| 1. | மாநகர நல அலுவலர் 9100–275–14050 | | 1 | ஒரு பணியிடம் தோற்றுவிக்கப்படுகிறது. மாநகராட்சி பணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 2. | மருத்துவ நல அலுவலர் 8000–275–13500 (நகர் நல அலுவலர்/மருத்துவ அலுவலர்/மருத்துவ அலுவலர் | 9 | – | தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மாநகர நல அலுவலர் பணியிடம் பூர்த்தி செய்தவுடன் நகர்நல அலுவலர் பணியிடத்தை தாய்துறைக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும். |
| 3. | மருத்துவ அலுவலர் (மயக்கவியல்) 8000–275–13500 | – | 1 | ஒரு புதிய பணியிடம் தோற்றுவிக்கப்படுகிறது. இப்பணியிடம் அரசு மருத்துவத் துறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித்தகுதி அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 4. | துப்புரவு ஆய்வர் 4500–125–7000 | 15 | – | தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 5. | மருந்தாளுநர் 4500–125–7000 | 2 | – | தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 6. | சுகாதார பார்வையாளர் 4500–125–7000 | 4 | – | தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | நிலைய மூதாதையர்<br>4000–100–6000 | 2 | – | தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 8. | பல்நோக்கு சுகாதார பணியாளர் (ஆண்/பெண்)<br>3200–85–4900 | 47 | – | பல்நோக்கு சுகாதார பணியாளர் (ஆண்/பெண்) மற்றும் பகல்பேறு உதவியாளர் பணியிடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மாநகராட்சி பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 9. | களப்பணி உதவியாளர்/செவிலியர் (ஆண்/பெண்)<br>2650–65–3300–70–4000 | 4 | – | தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மேலும் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு இப்பணியிடங்கள் தேவைப்படின் இப்பணியிடங்களை மாநகராட்சி பொதுசுகாதார பணிவிதிகளில் தகுந்த இடத்தில் சேர்க்க கருத்துரு ஆணையரால் அனுப்பப்பட வேண்டும். |
| 10. | கணினி புள்ளி விபர எழுத்தர்<br>4000–100–6000 | 4 | – | தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. இப்பணியாளர்களை மாநகராட்சி பணி அமைப்பில் கொண்டுவர கருத்துரு ஆணையரால் அனுப்பப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ஈ.அடிப்படை பணி | | | | |
| 1. | அலுவலக உதவியாளர்<br>2550–55–2660–60–3300 | 12 | 1 | தற்போதுள்ள பணியிடங்கள் தொடரவும் கூடுதலாக ஒரு பணியிடமும் தோற்றுவிக்கப்படுகிறது. மாநகராட்சி அடிப்படைப்பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 2. | இரவுக் காவலர்<br>2550–55–2660–60–3300 | 17 | 10 | தற்போதுள்ள பணியிடங்கள் தொடரவும் கூடுதலாக பத்து பணியிடமும் தோற்றுவிக்கப்படுகிறது. மாநகராட்சி அடிப்படைப்பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 3. | சுத்திகரிப்பாளர்(தலைமை நீரேற்று நிலையம்)<br>2550–55–2660–60–3300 | 12 | – | தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மாநகராட்சி அடிப்படைப்பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 4. | உதவியாளர் (attendant) ஆண் /பெண்<br>2550–55–2660–60–3300 | 19 | – | மகப்பேறு ஆயா மற்றும் பெண் உதவியாளர்கள் பணியிடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மாநகராட்சி அடிப்படைப்பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 5. | செயல்திறனற்ற பணியாளர்கள்<br>2550–55–2660–60–3300 | 43 | – | குழாய் திறப்பாளர், லாரி துலக்குநர், கேங்க் மஸ்தூர், சங்கிலியாளர் மற்றும் மின்கம்பியாளரின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | உதவியாளர் ஆகிய பணியிடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மாநகராட்சி அடிப்படைப்பணி விதிகளின்படி இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 6. | துப்புரவுப் பணியாளர் 2550–55–2660–60–3300 | 822 | – | தற்போதுள்ள பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மேலும் கூடுதல் பணியிடம் தேவைப்படின் உரிய கருத்துருவினை ஆணையர் அனுப்ப வேண்டும். |

கே. தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.
2/10/08